பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-

04 07 2024 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறைப்பயணமாக ரஷ்யா மற்றும் ஆஸ்திரிய நாடுகளுக்கு வரும் திங்கட்கிழமை புறப்பட்டு செல்கிறார்.

2. புதிய குற்றவியல் சட்டங்கள் நீதித்துறையின் சேவையை விரைவுப்படுத்த உதவிடும் என்று மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

3. இந்தியர் ஒருவர் அடுத்த ஆண்டில் விண்வெளிக்கு செல்வதை உலகம் கண்கூடாக பார்க்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

4. ஜார்கண்ட் மாநில முதலமைச்சராக திரு ஹேமந்த் சோரன் இன்று மீண்டும் பதவியேற்றுக்கொண்டார்.

5. விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது..

<u>இனி விரிவான செய்திகள்--</u>

**<<<<<<<>>>>>>**

தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளை உலக நாடுகள் அடையாளம் கண்டு அவற்றை தனிமைப்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நடைபெற்றுவரும் ஷாங்காய் ஒத்துழைப்புக்கான உச்சிமாநாட்டில் பிரதமரின் உரையை வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் வாசித்தார்.

தீவிரவாதத்தை எந்த வடிவிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிக்கும் நாடுகளுக்கு எதிராக உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு எதிராக உறுதியான பதிலடி கொடுக்க வேண்டியது அவசியம் என்றும், தீவிரவாதத்துக்கு நிதியுதவி அளிப்பதை முறியடிக்க வேண்டும் என்றும் பிரதமர் அதில் வலியுறுத்தியுள்ளார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இளைஞர்களிடையே பிரிவினைவாதம் பரவுவதை தடுக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<<>>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறைப்பயணமாக வரும் 8-ஆம் தேதி ரஷ்யா செல்கிறார்.

ரஷ்யா அதிபர் திரு விளாடிமீர் புட்டினின் அழைப்பை ஏற்று பிரதமர் இந்த பயணத்தை மேற்கொள்வதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த பயணத்தின்போது இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் பிரதமர் விவாதிக்க உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பயணத்தை முடித்துக்கொண்டு திரு நரேந்திர மோடி வரும் 9-ஆம் தேதி ஆஸ்திரியா செல்கிறார்.

41 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் ஆஸ்திரியா செல்வது இதுவே முதல் முறையாகும்.

மாஸ்கோ மற்றும் வியன்னாவில் இந்திய வம்சாவளியினருடனும் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

<<<<<<<>>>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், இரண்டு நாள் பயணமாக நாளை மறுநாள் கேரளா செல்கிறார்.

திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கழகத்தின் 12-ஆவது பட்டமளிப்பு விழாவில் வரும் சனிக்கிழமை அவர் பங்கேற்று உரையாற்றுகிறார்.

சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு குடியரசு துணைத்தலைவர் பதக்கங்களையும் வழங்குகிறார்.

வரும் ஞாயிற்றுக்கிழமை திரு ஜெக்தீப் தங்கர் கொல்லம் செல்கிறார்.

<<<<<<<>>>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள் நீதித்துறையின் சேவையை விரைவுப்படுத்த உதவிடும் என்று மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.
உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாதில் மத்திய புலனாய்வு அமைப்பு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிபிஐ அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவர் பதக்கங்களை வழங்கி அவர் பேசினார்.
கடந்த ஒன்றாம் தேதிமுதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய குற்றவியல் சட்டங்கள் மக்களின் வாழ்க்கை முறையை எளிதாக்குவதுடன், விரைந்து நீதி வழங்குவதற்கு வழிவகை செய்யும் என்று அவர் கூறினார்.
சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் புதிய குற்றவியல் சட்டங்கள் ஆக்கப்பூர்வமான வகையில் உதவும் என்றும் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறினார்.

<<<<<<<>>>>>>

இந்தியர் ஒருவர் அடுத்த ஆண்டில் விண்வெளிக்கு செல்வதை உலகம் கண்கூடாக பார்க்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

தில்லியில் இன்று, இந்தியாவின் விண்வெளி மற்றும் கடல்சார் துறை முன்னேற்றம் என்னும் நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

விண்வெளிக்கு மனிதர்களை முதல்முறையாக அனுப்பும் திட்டத்திற்காக நான்கு இந்திய விண்வெளி வீரர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இதேபோல், இந்தியாவின் ஆழ்கடல் திட்டத்திற்கும் மூன்று இந்தியர்கள் அடுத்த ஆண்டில் அனுப்பப்படுவார்கள் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நடப்பு கல்வியாண்டில் இருந்து மூன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கழகத்தில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த புத்தகங்களுக்கான இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

ஒன்பது பாடங்களுக்கான புத்தகங்கள் ஏற்கனவே தயாராகி உள்ள நிலையில், எஞ்சியுள்ள பாடப்புத்தகங்கள் விரைவில் தயாராகும் என்று அவர் தெரிவித்தார்.

குறைந்த கட்டணத்தில் உயரிய தரம் வாய்ந்த புத்தகங்களை கொண்டு கல்வி பயில்வதை எளிதாக்கும் நோக்கத்துடன் புதிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதாக திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

<<<<<<<>>>>>>

ஜார்கண்ட் மாநில புதிய முதலமைச்சராக திரு ஹேமந்த் சோரன் இன்று பதவியேற்றுக்கொண்டார்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் நிர்வாகத்தலைவரான திரு ஹேமந்த் சோரனுக்கு, ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பண மோசடி குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டிருந்த திரு ஹேமந்த் சோரனுக்கு, ஜார்கண்ட் உயர்நீதிமன்றம் அண்மையில் ஜாமின் வழங்கியதையடுத்து, மூன்றாவது முறையாக முதலமைச்சராக அவர் பதவியேற்றுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

மேட்டுப்பாளையம் முதல் கோவை ரயில் நிலையம் வரை இரட்டை இருப்புப்பாதை அமைக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல்.முருகன், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவை வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ரயில்வே அமைச்சரை நேரில் சந்தித்த திரு எல். முருகன் இதுதொடர்பான கோரிக்கை மனுவினையும் சமர்ப்பித்தார்.

<<<<<<<>>>>>>

பசுமை ஹைட்ரஜன் இயக்கத்திற்கான நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை வெளியிட்டுள்ள இந்த நெறிமுறைகளில் பரிசோதனை, கட்டமைப்பு மற்றும் நிதி ஆதாரங்களை வழங்குவதற்கான வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன.

நடப்பு நிதியாண்டில் இதனை செயல்படுத்துவதற்காக 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தானின் வடக்கு மாகாணமான ,'**Samangan** –னில் கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

'**Balkh** 'மாகாணத்துடன் நெடுஞ்சாலையையும், மாவட்ட சாலையையும் இணைக்கக்கூடிய பகுதியில் வேகமாக வந்த வாகனம் திடீரென சாலையோரம் கவிழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே அவர்கள் உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

நாட்டின் மேற்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

குஜராத்தின் தெற்கு மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதேபோல், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார் மாநிலங்களிலும், ஜம்முவிலும் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் **Alexander Bublik – Shevchenko** இணையை வென்றது.

---------------

உலக டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணியினர் பங்கேற்றுள்ள வெற்றிப்பேரணி தற்போது மும்பையில் நடைபெற்று வருகிறது.

மரைன் ட்ரைவிலிருந்து, வான்கடே மைதானம் வரை இந்திய அணியினர் திறந்தவெளி பேருந்தில் செல்கின்றனர்.

இந்திய வீரர்களை பார்ப்பதற்காக தேசிய கொடியுடன் வழிநெடுகிலும் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து வான்கடே மைதானத்தில் இந்திய அணியினருக்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

-------------------

உலக **Cadet** செஸ் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜார்ஜியாவில் நடைபெற்ற இப்போட்டியில் மகளிர் 12 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Pratitee Bordoloi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Sattwik Swain** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**-----------------------**

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Negi** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்தோனேஷியாவின் **Yogyakarta**–வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 22-20 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Jung Yi Soo** –வை வென்றார்.

இதர ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டங்களில் பிரணவ் ராம் 21-10- 21-8 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Rizki Dwi Cahyo** –வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் **Tanvi Sharma**-வும் 21-11, 21-18 என்ற செட் கணக்கில், சீனாவின் **‘Xu Teng Ti**-ஐ வென்றார்.

-------------

பாங்காக்கில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<END>>>>>>**